24.02.2017

தினமணி

# இயற்கை ரப்பர் உற்பத்தி 27% அதிகரிப்பு



நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி சென்ற ஜனவரி மாதத்தில் 27 சதவீதம் அதிகரித்தது.

இதுகுறித்து ரப்பர் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளதாவது:

நடப்பு ஆண்டு ஜனவரியில் இயற்கை ரப்பர் உற்பத்தி 66,000 டன்னாக இருந்தது. கடந்த ஆண்டின் இதே கால அளவில் உற்பத்தியான 52,000 டன்னுடன் ஒப்பிடுகையில் இது 27 சதவீதம் அதிகமாகும். இயற்கை ரப்பர் உற்பத்தி

அதிகரித்ததன் காரணமாக அதன் இறக்குமதி 39,512 டன்னிலிருந்து 39 சதவீதம் சரிவடைந்து 24,093 டன்னாக காணப்பட்டது.

அதே சமயம், உள்நாட்டில் இயற்கை ரப்பர் பயன்பாடு 84,875 டன்னிலிருந்து 1 சதவீதம் குறைந்து 84,000 டன்னாக இருந்தது. சென்ற ஜனவரி மாதம் இறுதி நிலவரப்படி 2.77 லட்சம் டன் இயற்கை ரப்பர் கையிருப்பில் உள்ளது.

நடப்பு நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான 10 மாத கால அளவில் இயற்கை ரப்பர் உற்பத்தி 15 சதவீதம் அதிகரித்து 5.65 லட்சம் டன்னாகவும், அதன் பயன்பாடு 5 சதவீதம் உயர்ந்து 8,59,930 டன்னாகவும் காணப்பட்டது. அதே சமயம், அதன் இறக்குமதி 3,98,487 டன்னிலிருந்து 3.38 சதவீதம் குறைந்து 3,85,017 டன்னாக இருந்தது என்று ரப்பர் வாரியம் அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

**பீன்ஸ் விலை வீழ்ச்சி: நெருக்கடியில் மலைவாழ் மக்கள்**



பீன்ஸ் விலை வீழ்ச்சி அடைந்து வருவதையடுத்து மலைவாழ் மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

உடுமலை அருகே, தமிழக - கேரள எல்லையில் உள்ள அமராவதி வனச் சரகத்துக்கு உள்பட்ட தளிஞ்சி, தளிஞ்சி வயல், மஞ்சம்பட்டி ஆகிய 3 மலைக் கிராமங்களில் விவசாயம் பிரதானத் தொழிலாக உள்ளது. இதை நம்பி சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்நிலையில், 90 நாள்களில் விளையக் கூடிய பீன்ஸ் பயிரை கடந்த டிசம்பர் மாதம் மலைவாழ் மக்கள் பயிரிட்டிருந்தனர். குத்து பீன்ஸ், கொடி பீன்ஸ் என இரண்டு வகையான பீன்ஸ்கள் பயிரிடப்பட்டிருந்தன.

பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் அவை அறுவடைக்கு வந்தன. இதையடுத்து, மதுரை, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் உள்ளிட்ட சந்தைகளில் பீன்ஸ் கிலோவுக்கு ரூ. 80 முதல் ரூ. 90 வரை விலை கிடைத்து வந்ததால் மலைவாழ் மக்கள் மகிழ்ச்சி அடைந்திருந்தனர்.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக திடீரென பீன்ஸ் விலையில் சரிவு ஏற்பட்டு வருகிறது. தற்போது, கிலோ ரூ. 40 முதல் 50 வரை மட்டுமே விலைபோவதால் மலைவாழ் மக்கள் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

இதனால், அவர்களில் ஒரு சிலர் சந்தைகளுக்கு பீன்ஸை கொண்டு செல்லாமல் அதில் உள்ள முத்துகளை மட்டும் தனியாகப் பிரித்தெடுத்து, காய வைத்துப் பக்குவப்படுத்தி விற்பனை செய்து வருகின்றனர். அந்த வகையில் காய வைத்த பீன்ஸ் கிலோ ரூ. 70-க்கு விலை போவது குறிப்பிட த்தக்கது. ஆனாலும், இதில் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதுடன், காலதாமதம் ஏற்படுவதால் மலைவாழ் மக்களுக்கு உடனடியாகப் பணம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டு வருகிறது.

இதுகுறித்து, தளிஞ்சி, மஞ்சம்பட்டி மலைவாழ் மக்கள் கூறியதாவது: பீன்ஸ் பயிரை எங்கள் பகுதியில் இருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள சின்னாறு வனப் பகுதிக்கு டிராக்டரில் கொண்டு வருகிறோம். பின்னர் அங்கிருந்து வாடகை வேனில் மதுரை, ஒட்டன் சத்திரம், திண்டுக்கல் ஆகிய சந்தைகளுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து வருகிறோம். இதனால் போக்குவரத்து செலவு அதிகமாகிறது.

ஒரு ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் செலவு செய்த நிலையில் பீன்ஸ் கிலோ ரூ. 40 மட்டுமே விற்பனையாவது எங்களுக்கு கட்டுபடியாகவில்லை. அதிக நஷ்டம் ஏற்படுகிறது. பீன்ஸில் உள்ள முத்துகளைப் பிரித்து எடுத்துக் காய வைத்து விற்பனை செய்வதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. மேலும், எங்களுக்குப் பணம் கிடைப்பதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, உரிய நிவாரணம் கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றனர்.

**விவசாயிகள் வாழை பயிரிட்டு லாபம் பெற ஆட்சியர் அறிவுரை**



விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மாற்றுப் பயிராக வாழை பயிரிட்டு லாபம் பெறலாம் என்று ஆட்சியர் அறிவுறுத்தினார்.

விழுப்புரத்தில் தோட்டக்கலை துறை சார்பில் வாழை சாகுபடி குறித்த கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

ஆட்சியர் இல.சுப்பிரமணியன் தொடக்கி வைத்துப் பேசியது: தமிழகத்தில் வாழை சாகுபடியில் திருச்சி மாவட்டம் முதலிடத்தையும், தூத்துக்குடி இரண்டாம் இடத்தையும், திருநெல்வேலி மூன்றாம் இடத்தையும் வகிக்கிறது. சேலம், மதுரை, வேலூர், கடலூர், தஞ்சாவூர், கன்னியாகுமரி மாவட்டங்களிலும் வாழை அதிக அளவில் பயிரிடப்படுகிறது. வாழை, காய், தண்டு, பழம் என உணவாகப் பயன்படுகிறது. தண்டுகள் கால்நடைத் தீவனமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இவை மருத்துவ குணம் கொண்டதாகும்.

வாழையில் பூவன், ரஸ்தாளி, மொந்தன், கற்பூரவள்ளி, ரொபஸ்டா, மோரிஸ், நேந்திரன், செவ்வாழை, மலைவாழை கோ-1 போன்ற பல்வேறு வகைகள் உள்ளன. நீர் வழி உரமிடுதல், உயிரி உரமிடுதல், பாசனம், பக்கக் கன்றுகள் நீக்குதல், ஊடு பயிரிடுதல் மூலம் வாழை சாகுபடியில் நல்ல லாபம் பெறலாம்.

விழுப்புரம் மாவட்டம், அதிக விவசாய நிலப்பரப்பளவு கொண்டதாகும். ஆனால், மழையின்மையால் விவசாயிகள் வருவாய் இழப்பில் உள்ளனர். இந்த நிலையை கருத்தில் கொண்டு வாழை பயிரிட்டு வருவாய் பெற இந்தக் கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்துள்ளோம். இதிலுள்ள தொழில்

நுட்பங்களைப் பின்பற்றி வாழை சாகுபடி செய்து பயன்பெற வேண்டும்.

மாவட்டத்தில் 4.5 லட்சம் ஹெக்டர் விவசாய நிலம் உள்ளது. இதில், 33 ஆயிரம் ஹெக்டர் தோட்டப் பயிர் செய்கின்றனர். ஆனால், 456 ஹெக்டர் மட்டுமே வாழை பயிரிடும் நிலை உள்ளது. ஆகையால், தேனி உள்ளிட்ட மாவட்டங்களைப் போல் வாழை பயிரிட்டு லாபம் பெற வேண்டும் என்றார். தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் மணிமொழி வரவேற்றார். தொடர்ந்து, வேளாண் இணை இயக்குநர் கார்த்திகேயன், திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷீபா, தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் கருப்பையா, மேலாண்மை இயக்குநர் அஜீதன் உள்ளிட்டோர் வாழை சாகுபடி குறித்து விளக்க உரையாற்றினர். விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

**குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் வெள்ளாடு வளர்ப்பு: கால்நடை மருத்துவப் பல்கலை. துணைவேந்தர் சு. திலகர்**



வெள்ளாடு வளர்ப்பு குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் என, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் சு. திலகர் தெரி வித்தார்.

தமிழக அரசின் கன்னி மற்றும் கொடு ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், வெள்ளாடு வளர்ப்பின் மேலாண்மை தொழில்நுட்பங்கள் எனும் தலைப்பில் பண்ணையாளர்களுக்கான ஒருநாள் பயிற்சி அரங்கு திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதற்கு தலைமை வகித்து துணைவேந்தர் சு. திலகர் பேசியது: பசு, எருமை போன்ற கால்நடைகளை வளர்க்க முடியாத சூழலில்கூட வெள்ளாடுகளை வளர்க்கலாம். இதற்கு முதலீடு மிகவும் குறைவு. மேலும், வெள்ளாடுகளை மழை அளவு குறைவாக உள்ள வறண்ட நிலங்களில்கூட வளர்க்கலாம். எனவேதான் வெள்ளாடுகளை ஏழைகளின் பசு மற்றும் ஏழைகளின் ஏடிஎம் எனவும் அழைக்கின்றனர். இன்றைய சூழ்நிலையில் கிராமம் மற்றும் நகர்புறங்களில் ஆட்டிறைச்சித் தேவை அதிகரித்து வருவதால், சிறிய மற்றும் பகுதி நேர விவசாயிகளின் ஆடுவளர்ப்பு மேற்கொள்வதன் மூலம் வியாபாரரீதியாக நல்ல லாபம் ஈட்ட முடியும். மேலும், கொட்டகைகளுக்கான முதலீடும் பராமரிப்பு செலவும் குறைவு என்பதால் விவசாயத்துடன் ஒருங்கிணைந்து ஆடு வளர்ப்பை மேற்கொள்ளலாம். அரசின் மானிய உதவி, வங்கிக் கடன் உள்ளிட்டவற்றையும் பெறலாம் என்றார் அவர்.

திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் சு. வசந்தகுமார் பேசியது: வெள்ளாடு வளர்ப்பில் முதலீடு மிகவும் குறைவு. வெள்ளாடுகள் மிக்குறைந்த காலத்தில் (10-12 மாதங்களில்) பருவ வயதை அடைந்துவிடும். 16, 17ஆவது மாதங்களில் குட்டி ஈன்று விடும். ஆடுகள், பலவகைப்பட்ட பயிர்களையும் உண்பவை. இவை முட்புதர்கள், பூடுகள், வேளாண் பயிர்க்கழிவுகள் மேலும் வேளாண் உப விளைப்பொருள்கள் போன்ற அனைத்தையும் உண்பதால் தீவனப் பராமரிப்புக் குறைவு.

ஆட்டிறைச்சி குளிர்ச்சி மற்றும் மென்று உண்பதில் எளிதாகையால் வெயில் காலங்களுக்கு மிகவும் ஏற்றது. பசும்பாலைவிட வெள்ளாட்டுப்பால் எளிதில் செரிக்கக்கூடியது. கொழுப்பு திரள் குறைவு. இதில் ஏதும் ஒவ்வாமை ஏற்படுவதில்லை.

செம்மறி ஆட்டுடன் ஒப்பிடும்போது 2.5 மடங்கு பொருளாதார அளவில் மிதவெப்பம் பகுதிகளுக்கு வெள்ளாடுகள் ஏற்றவை. ஆட்டிலிருந்து கிடைக்கும் தோல், முடி ஆகியவையும் பதனிடு தொழிற்சாலைகளில் பயன்படுகின்றன. கிராமங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் பால் பொருள்கள் சம்பந்தமான குடிசைத் தொழில்களின் வளர்ச்சிக்கு இந்த ஆடு வளர்ப்பு பெரிதும் உதவி புரிகிறது என்றார் அவர்.

கல்லூரி முதல்வர் சு. திருநாவுக்கரசு, வெள்ளாடு வளர்ப்பு புத்தகங்களை வெளியிட்டு பேசினார். கால்நடை உற்பத்த மேலாண்மைத் துறைத் தலைவர் மு. முருகன், கால்நடை பண்ணை வளாக பேராசிரியர் எட்வின் உள்ளிட்ட பலர் பேசினர். இந்தப் பயிற்சியில், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த பண்ணையாளர்கள் கலந்துகொண்டனர். அனைவருக்கும் இடுபொருள்கள் வழங்கப்பட்டன.